# சங்க இலக்கியத்தில் கல்வி
# Education in *Caṅkam* Literature

முனைவர் செல்வ சுப்ரமணியம் ராமையா / Dr R.Seiva Subramaniam[1]

செல்வமணி பாஸ்கரன் / Selvamani A/L Baskaran[2]

Date of submission: 2021-05-13
Date of acceptance: 2021-5-30
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr R.Seiva Subramaniam
Email: selvas3098@gmail.com

## Abstract

The aims of education vary according to time and geographical setting; it also depends heavily on the politics, economy, social systems, and the philosophy of life prevailing at a particular time and place. Changes in the ideals and values accepted by the society calls for the corresponding changes in the education system. Therefore, good aims of education are related to the situations of life. Any organized education system must meet the real situations of a community. A child is not to be educated in a vacuum but taught the realities of the society since he is a member of the community as well. Understanding the ancient educational system can be accomplished via literature since the value of literature as a source of history, especially the ancient one, can hardly be exaggerated as it truly reflects the life and thought of the people of a specific time frame. The Caṅkam literature, which is the earliest known literature of South India that connotes the ancient Tamil literature, is the historical evidence of indigenous literary developments in South India and it offers insight into some aspects of the ancient Tamil culture, secular and religious beliefs, and the people themselves. One of the important aspects that we can amass from Caṅkam literature is the significance of education, notably to a child in mastering his multiple intelligences. The poems speak about the ways in which the early Tamils prioritized both formal and informal education. These poems are not just the earliest evidence of the Tamil ingenuity but this work hails as the best literary production in the 2,000-year journey of Tamil literature.

**Key Words:** Canka literature, Education, Social Child Development, Multiple of Intelligence, Sanggam literature

### முன்னுரை

*21ஆம் நூற்றாண்டில் கல்வித் துறை பரிணாம வளர்ச்சிகளை அடைந்துள்ளதை நம்மால் காண முடிகின்றது. ஒரு மனிதனின் சிந்தனைத் திறன், அறிவாற்றல் மற்றும் சுய ஒழுக்கம் ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சியை வித்திடும் (மலேசியா கல்வி அமைச்சு, 2017). அவ்வகையில் நம் நாட்டின் தற்போதைய கல்வி திட்டமான 21ஆம் நூற்றாண்டின் கற்றல் கற்பித்தல் மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை முறையாகச் செயல்படுத்த நம் நாட்டின் கலைத்திட்டமும் ஆசிரியர்களும் பெரும் பங்காற்றுகின்றனர். கல்வி என்பது மாணவர்களின் அறிவாற்றல், உடல், உள்ளம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு வித்திடும் ஓர் அறிவுச்சுரங்கமாக விளங்குகின்றது*

[1] The author is a Lecturer in Tengku Ampuan Afzan Teacher Training Institute in Kuala Lipis Pahang. selvas3098@gmail.com.

[2] The author is a Secondary School Teacher In SMK Tuanku Muhammad Kuala Pilah, Negeri Sembilan. selvajohor6868@gmail.com.

(தேசிய கல்வித் தத்துவம், 2010). கல்வி இன்றைய சமூகத்தின் வாழ்வாதாரமாக மாறி விட்டது என்றால் அது மிகையாகாது. இக்கருத்தினையே மலேசிய தேசியக் கல்வித் தத்துவமும் பின்வருமாறு விவரிக்கின்றது,

> "மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.
>
> மூலம் கல்விச் சட்டம் 1996,(சட்டம் 550)

அவ்வகையில் கல்வியை மக்களிடம் கொண்டுச் செல்லும் சாதனமாக மொழி திகழ்கிறது. ஒரு மொழியின் வாயிலாகப் படைக்கப்படும் இலக்கியங்கள், மனிதன் தனது வாழ்நாளில் கடைப்பிடிக்கும் ஒரு நெறியினை நமக்கு படம் பிடித்துக் காட்டும் ஆற்றல் கொண்டது. ஆகவே, இலக்கியமானது மனிதனின் வாழ்க்கையைச் செம்மைபடுத்தும் வகையிலும் அமையும்.

தமிழ் இலக்கியம் ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டுகளின் வரலாறு உடையது. அவ்வாறு பழங்காலத்தில் தோன்றி வளர்ந்து இன்று வரையிலும் காக்கப்பட்டு வருகின்ற இலக்கியமே சங்க இலக்கியமாகும் (வரதராசன், 2011). செம்மொழி இலக்கியங்களில் கல்வி பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. சங்க காலத்தில் கற்றறிந்த புலவர்கள் அவையாகத் தமிழ்ச்சங்கங்கள் அமைந்திருந்தன. பெண்பாற் புலவர்கள் முப்பதுக்கும் மேலாக இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இவ்வகையில் கல்வி நிலையில் சிறப்புற்ற சமுதாயமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழினம் இருந்துள்ளது. சங்ககால கல்வி நிலையை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## கட்டுரையின் நோக்கம்

சங்க இலக்கியத்தில் கல்வி என்ற ஆய்வுக் கட்டுரையானது, கீழ்க்காணும் நோக்கத்தை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

i. சங்க இலக்கியம் பாடல்கள் வழி பழந்தமிழர் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தை அறிதல்; பகுத்தாய்தல்.

ii. சங்க கல்வி முறை எவ்வாறு இன்றைய காலத்தின் கல்வி முறையோடு பொருந்தியுள்ளது என்பதனை ஒப்பிடுதல்.

## ஆய்வு முன்னோடிகள்

சங்க இலக்கியம் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் இருந்தாலும் கல்வி தொடர்பாக உள்ள ஆய்வுகள் மிகக் குறைவே. அப்படியே அவற்றில் இருந்தாலும் பெரும்பாலான ஆய்வுகள் சங்க இலக்கிய பாடல்களின் விளக்கவுரையாகத் தான் அமைந்திருக்கின்றன. அதுவும் இன்றைய காலக்கட்டத்தின் கல்வித் திட்டத்தோடு ஒப்பிட்டு மேற்கொண்ட ஆய்வுகளைக் காண்பது மிக அரிது. பெரும்பாலான ஆய்வுகள் சங்கப் பாடல்களின் விளக்கவுரையாக மட்டுமே அமைந்திருக்கின்றன. அவ்வகையில் ஒரு சில ஆய்வுகள் இந்தக் கட்டுரைக்கு ஆய்வின் முன்னோடிகளாக அமைந்தன.

*Heritage of the Tamils: Education & Vocation* (S.V.Subramanian & V.R.Madhavan, 1986) என்ற ஆய்வானது சங்கக் கால மக்களின் கல்வி முறையினைப் பல்வேறு துணை தலைப்புகளின் விவரிக்கின்றது. அவை, *Education of the Sangam Tamils, Teachers and teaching- Learning process in ancient Tamil Educational system, The ancient Indian Education of North India and Tamil Nadu- A Comparative Study, Life Oriented Education of the Tamils, Vedic Education and Tamil Education- A comparative Study, Physical Education of the Tamils dan*

*Curriculum of ancient Tamil's Educational system and its uses* போன்றவை அடங்கும். இக்கட்டுரைகள் இந்த ஆய்விற்கு மிகவும் துணைப்புரிந்தன.

*Pendidikan dalam peradapan india pada zaman klasik* (AYA Durai.L, 2003) என்ற ஆய்வானது இந்திய மண்ணில் காலங் காலமாய் இருந்து வந்த கல்வி முறையினை விளக்கும் ஆய்வாக அமைகிறது. வேத காலம் தொடங்கி புராண காலம் வரை இந்திய மண்ணின் கல்வி வளர்ச்சியை விவரிக்கின்றது. இந்த ஆய்வின் வாயிலாக சங்க காலத்தில் இடம் பெற்ற கல்வி முறையினை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடான *Journal Of Tamil Studies* என்ற ஆய்வுக் கோப்பையில் 1972 தொடங்கி 2010 ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட பல்வேறு ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் ஒரு சில ஆய்வுகள் சங்க கால கல்வி பற்றிய பல்வேறு ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. (<http://www.ulakaththamizh.org/JOTSissues.aspx>). அவற்றில் *Guide To Murukan, Contripution Of The Tamil To Culture, Tamil Literature Through The Ages, Education And Arts Of Early Tamils,* மற்றும் தமிழர் வழிபாடு போன்ற ஆய்வுகள் அடங்கும்.

## கட்டுரையின் வரையரை

சங்க இலக்கியமும் கல்வியும் என்ற ஆய்வானது மிக ஆழமும் அகலமும் கொண்ட ஆய்வுக்குரியப் பொருளாகும். இத்தகைய ஆய்வுகள் மிகப் பெரிய ஆய்வுகளுக்கு இட்டுச்செல்வதோடு அதிக காலத்தையும் எடுத்துக் கொள்ளும். அதே வேளை ஆய்வின் முடிவுகளோ பல நூல்களுக்குள் அடங்கும் வண்ணம் எண்ணிக்கையில் விரியும் தன்மைக் கொண்டன. இதற்குக் காரணம் கல்வி என்று சொல்லும்போது சமயம், அறிவியல், மருத்துவம், வானவியல், கணிதம், பாதுகாப்பு, பொருளாதாரம், கலை, விவசாயம், என பல்வேறு துறைகளோடு நெருங்கிய தொடர்புடையது. கல்வியறிவு பெற்ற சமுதாயத்தினால் மட்டுமே பல்வேறு உபகாரணங்களையும், ஆயுதங்களையும், ஏன் தத்துவங்களையும் கண்டுப்பிடிக்க முடிந்திருக்க முடியும் என்பதே இதற்குச் சான்றாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரையானது சங்க இலக்கியங்களில் காணப்படும் ஒரு சில பாடல்களை மட்டும் உதாரணமாக எடுத்துக் கொண்டு, சங்க கால மக்கள் கல்வி பற்றி எம்மாதிரியான சிந்தனைகளைப் பெற்றிருந்தனர் என்ற வரையறைக்கு உட்பட்டு, ஒரு சில எடுத்துக்காட்டுகளையும் மதிப்பீட்டுகளை மட்டுமே இந்த ஆய்வு முன்வைக்கின்றது. இதன் வாயிலாக, சங்க காலத்தில் கல்விக்கு, குறிப்பாகப் பழந்தமிழர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்ற மதிப்பீடும் இடம்பெறுகிறது. அதேவேளை சங்க கல்விக்கும் இன்றைய தேசிய கல்வி தத்துவத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையும் பகுத்தாய்கிறது.

## கல்வி: ஒரு விளக்கம்

காட்டுமிராண்டியான மனிதன் விலங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எழுப்பிய ஒலி கருத்துடன் கூடியதல்ல. இந்நிலையில் மற்றவர்களின் துணையை நாடிய போது கூடி வாழும் நிலை ஏற்பட்டது. அப்போதுதான் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து கொள்ள மொழிப்பயன்பாடு அவர்களுக்கு இன்றியமையாததாயிற்று. இயற்கையை எதிர்த்து வாழவேண்டிய மனிதனுக்கு கூரிய அறிவும் சீரிய உணர்வும் மிகுந்து தேவையாயிற்று. எனவே அவன் தனக்கு வேண்டிய அறிவை இயற்கையிடமிருந்தே கற்றான். எனவே மாந்தனின் முதல் ஆசிரியர் இயற்கையே; அக்கல்வியின் வாயிலாக வாழ்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள துணிந்தான் (Venkat Araman, 1986).

மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மனவலிமையையும் விரிந்த அறிவையும் சுயவலிமையையும் தருவது கல்வியாகும். கல்வி 'வாழ்வின் அணியாகவும் தாழ்வின் துணையாகவும் விளங்குவது' எனக் கல்வியின் சிறப்புரைப்பர் அரிஸ்டாட்டில்.

மலேசிய நாட்டின் தேசியக் கலைத்திட்டமும் அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வித்திட்டமாகத் திகழ்கிறது. இத்திட்டம் மாணவர்கள் உடல், ஆன்மிகம், அறிவு, உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிருக்க வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும் அவர்கள் அறிவைப் பெறவும் வழிவகுக்கும் வகையில் அமைந்திருக்கின்றது (Dokumen Standard Kurikulum Pentaksiran, 2017).

## சங்க இலக்கியத்தில் கல்வியைப் பற்றிய குறிப்புகள்

சங்க இலக்கியத்தில் காணப்படும் கல்வி பற்றிய குறிப்புகளை நாம் மதிப்பீடு செய்யும் முதன் முதலில் கல்வி சம்பந்தமான பாடல்களின் வரிகளை அடையாளம் காண்பது சிறப்பாகும். அதன் பிறகே, கிடைக்கப்பெறும் குறிப்புகளின் வாயிலாக நம்மால் சங்க இலக்கியம் காட்டும் கல்வி பற்றிய மதிப்பீட்டை வெளிப்படுத்த முடியும். அந்த வகையில்,

*'ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே*

*சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே'* (புறம் 312)

என்ற பாடல் வரிகளின் வாயிலாக ஒரு குழந்தையைச் சான்றோனாக்கும் கடமை தந்தையைச் சாரும் என்ற உண்மையை உரக்கமாக பகிர்கின்றது. ஒரு குழந்தைக்குக் கல்வி புகட்டுவது முழுக்க முழுக்க ஆசிரியரின் கடைமையாகும் என்ற கருத்தினை அன்றே தகர்த்து, ஆசிரியரோடு பெற்றோரும் இணைந்து செயல்பட்டால்தான் அக்குழந்தை கல்வி கேள்விகளில் சிறப்பர் என்ற கருத்தை உலகிற்கு முன் வைத்த பெருமை தமிழரையேச் சாரும். இதன் விளைவே இன்று பள்ளிகளில் இயங்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுப் போல, பழந்தமிழர் கல்வியைப் பற்றி எம்மாதிரியான சிந்தனைகள் கொண்டிருந்தனர் என்பதற்கு மிக்க சரியான எடுத்துக்காட்டு புறநானூற்றில் இடப்பெற்றுள்ளது.

*"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,*

*பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!*

*பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,*

*சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;*

*ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,*

*மூத்தோன் வருக' என்னாது, அவருள்*

*அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்;*

*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,*

*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,*

*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே*
(புறம் 183)

தமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க்குத் தேவைப்படும் பொழுது உதவி செய்தும், மிகுந்த அளவு பொருள் கொடுத்தும், ஆசிரியரிடம் பணிவோடு, வெறுப்பின்றி கல்வி கற்றல் நன்று. ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுள், அவர்களின் கல்விச் சிறப்புக்கேற்ப தாயின் மனநிலையும் மாறுபடும். ஒரே குடும்பத்தில் பிறந்த பலருள்ளும் "மூத்தவன் வருக" என்று கூறாமல் அறிவுடையவனையே அரசனும் தேடிச் செல்வான். கீழ்க்குலத்தில் உள்ள ஒருவன் கல்வி கற்றவனாக இருந்தால், மேற்குலத்தில் உள்ள ஒருவன் அவனிடம் கல்வி கற்கச் செல்வான் என்று பாடல் விளக்கம் அளிக்கின்றது (Shiza Mozhi, 2014). இந்தப் பாடல் வழி நான்கு செய்திகள் தெரிய வருகின்றன.

i. கல்வியைப் போதிக்கும் ஆசிரியரின் நலனைப் பாதுக்காக்க வேண்டும்.

ii. பெற்ற தாயும் கற்றறிந்த பிள்ளையினையே விரும்புவாள்.

iii. ஒருவருக்கு மதிப்பும் மரியாதையும் அவர் கற்ற கல்வியால்தான் கிட்டுமே தவிர வயதிற்காக அல்ல.

iv. கல்வியறிவு பெற்றவனை அனைவரும் நாடுவர்.

ஆகவே கல்வியறிவு என்பது மிகவும் போற்றத்தக்க அம்சமாக பழந்தமிழர் வாழ்வில் இருந்திருக்கின்றது. கல்வியறிவு வேண்டி கல்விச்சாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குக் கல்வியின் அவசியம் நன்கு உணர்த்தப்படுகின்றது. ஆசிரியர்களுக்கான

உரிய மரியாதை, கல்வி கற்றல்தான் மதிப்பும் மரியாதையும் கிட்டும் என்ற சிந்தனை சங்க காலத்தில் நம்மால் காண முடிகின்றது. அதனாலே பரிசில் வேண்டி வரும் புலவர் பெருமக்களை, மன்னன் முன் சென்று வரவேற்றான் என பல்வேறு குறிப்புகள் சங்க இலக்கியத்தில் உண்டு. புலவர் பெருமக்களும் தங்களின் அறிவுத்திறனால் அறிவுரைகள் வழங்கி மன்னனை நல்வழிப்படுத்திய சம்பவங்களும் சங்க இலக்கியத்தில் சான்றாக பல உள்ளன (Bavani, 2014).

மனிதனின் அறிவு வளர்ச்சிக்குக் கல்வி மிக அவசியம். அக்கல்வியானது அதிகாரப் பூர்வமாகவும், மறைமுகமாகவும் சங்க காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைக்கான அதிகாரப்பூர்வமற்ற கல்வி குடும்ப உறுப்பினர்கள் மூலமாகவும், அதிகாரப்பூர்வக் கல்வி கல்விச்சாலைகள் மூலமாகவும் நடைப்பெற்றது (Shiza Mozhi, 2014, p.437). குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கல்வி கற்கும் முறைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் காண முடிகின்றது. அதன் விவரங்கள் பின்வரும் அட்டவணை 4-இல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: கல்வி முறை**

| அ. அதிகாரப்பூர்வக் கல்வி | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| தாய்மொழிக் கல்வி | *பரி 11: 87-88* | குழந்தைகளுக்குக் கல்விச்சாலையில் தமிழ் எழுத்துகள் சிறு வயது முதற்கொண்டே அறிமுகம் செய்யப்படுகின்றன. |
| மாணவர் கடமை | *புறம் 183: 1-2* | ஆசிரியர் கற்றுத்தரும் கல்வியை மாணவர்கள் ஆழமாகக் கற்றுத் தெளிவடைய வேண்டும். இதனால் ஆசிரியரின் பாரம் குறையும். ஆசிரியரின் கோபத்திற்கு ஆளாகக் கூடாது. |
| கேள்விக் கேட்கும் திறன் | *புறம் 237:5* | மாணவர்கள் கேள்விக் கேட்கும் திறன வளர்த்துக் கொள்வதன் வாயிலாக கற்கும் கல்வியைப் பிழையில்லாமல் கற்க முடியும். |
| மதச்சார்புடைய கல்வி மடங்கள் | *மதுரை - 468-488 பட்டின 53-55* | புத்த மதம் மற்றும் ஜைன மதத்தைப் போதிக்கும் கல்வி மடங்கள் வேத அறிவை மாணவர்களுக்கு போத்தித்தல் |
| கல்வி கற்காத குழந்தைகள் | *அகம் - 127: 15* | சிறு வயது முதற்கொண்டே முறையான கல்வியறிவு பெறாத குழந்தைகள் தவறான செயல்களில் ஈடுபடுதல் |

| ஆ. அதிகாரப்பூர்வமற்றக் கல்வி | | |
|---|---|---|
| வீர உணர்வும் நாட்டுப்பற்றும் | *புறம்-74:1-2, 86:4-6, 8-9:5,1-10* | குழந்தைகளுக்கு சிறு வயது முதற்கொண்டே வீர உணர்வு நாட்டுப்பற்றும் குடும்ப உறுப்பினர்களால் ஊட்டப்படுகிறது. இதனாலே சிறு வயதிலும் நாட்டைக் காக்க வேண்டி பிள்ளைகள் போர்களம் செல்லவும் துணிகின்றனர். |

| | | |
|---|---|---|
| பெரியோரை மதித்தல் | பதிற்று 7-9:3,70: 20 -22, சிறு- 23 | பெரியோரைக் கண்டதும் இரு கரம் கூப்பி வணக்கம் சொல்லி மரியாதையைப் புலப்படுத்த வேண்டும். |
| நல்ல பழக்க வழக்கங்கள் | குறிஞ்சி- 13-18 அகம் -304:19 புறம் - 187:1-4, 214:1-2 கலி - 133: 6-14 நற்றிணை 110: 11-13 | ஒருவர் எப்பொழுதும் நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து தனது நன்னடத்தையைப் பாதுகாக்க வேண்டும். இல்லையினில் அவரை இந்தச் சமூகம் ஒதுக்கி வைத்து விடும். |
| உண்மை பேசுதல் | ஐங் - 287: 3-4, 472:3 -5 நற்றி 310:10-11, 283: 68, 1:1 | பொய் பேசுதல் மிக இழிவான செயலாகக் கருதப்படுகிறது. விளையாட்டிற்காகக் கூட பொய் பேசக் கூடாது என்று வலியுறுத்தப்படுகிறது. உண்மையை மட்டும் பேசினால் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. |
| மற்றவரோடு பகிர்தல் | பதிற்று 38: 13-16 புறம் - 46: 3-4, 182 நற்றி- 186: 8, 210: 5-9 | குழந்தைகள் தங்களுடைய உணவு, விளையாட்டுக் கருவிகள் போன்றவற்றை மற்றவரோடு பகிர்ந்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். |
| கர்மப் பலன் | புறம் 176:78,192:11 194:6-7, 236:10-12 குறுந் 366:11-12 | ஒருவர் செய்யும் செயலுக்கு ஏற்பவே அவரின் கர்மப் பலனும் அமையும். நல்லது செய்தால் நன்மையும் தீயவைச் செய்தால் தீமையும் தான் கிடைக்கும். |
| தர்மம் செய்தல் | பரி- 10: 87-88 புறம் 29:20-26,72:17-19, பதிற்று 20:21-27, 6:16 20 கலி 2:11-19, 14:14 1527: | தர்மம் செய்யும் செயல் மிகவும் ஊக்குவிக்கப் படுகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தர்மம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். |
| இறை வழிபாடு | மதுரை 461-466 பரி 8:125-126,17:35-39, | பெற்றோர்கள் கோவிலுக்குச் செல்லும்போது தங்கள் குழந்தைகளையும் அழைத்துச் சென்று வழிபாடு மேற்கொள்கின்றனர். |
| புறம் பேசுதல் | மலை 77-80 கலி 43:18-19 | பிறரைப் பற்றி புறம் பேசுதல் இழிவான செயலாகக் கருதப்படுகிறது. |
| செய்நன்றி மறத்தல் | புறம் 34: 5-7 குறுந்தொகை 115: 1 கலி 34: 45, 149: 4-12 | செய்நன்றி மறத்தல் பெரிய பாவமாகக் கருதப்படுகிறது. அதேவேளை மற்றவருக்கு உதவும் வாய்பிற்காகக் காத்திருப்பதே உத்தமம். |
| சோம்பலை தவிர்தல் | நற்றிணை252:4, 214:1 -2 அகம் 173:13, 231:1 -3 புறம் 182:3 பதிற்று 70:1 | ஒருவரின் ஏழ்மைக்கு காரணம் சோம்பலேயாகும். ஆகவே வாழ்க்கையில் வெற்றிப் பெற சோம்பலைத் தவிர்க்க வேண்டும் |

## V. விளையாட்டு முறை

குழந்தைகள் என்றாலே விளையாட மிகவும் விரும்புவர். விளையாட்டு என்பது உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது (Sangar, 2011, p.155). பண்டையக் காலத்தில் குழந்தைகள் விளையாடிய விளையாட்டுகளைப் பற்றிய குறிப்புகளை சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. அப்படிச் சங்க காலத்தில் குழந்தைகளால் விளையாடப்பட்ட விளையாட்டுகளை பின்வருமாறு பிரிக்கலாம்.

i. தனியாள் விளையாட்டு

ii. குழு விளையாட்டு

iii. ஆண் குழந்தைகள் விளையாட்டு

iv. பெண் குழந்தைகள் விளையாட்டு

v. இருபாலரும் விளையாடும் விளையாட்டு

vi. உடல் உறுப்புகள் பயன்படுத்தும் விளையாட்டுகள்

vii. அறிவுத் திறனைப் பயன்படுத்தும் விளையாட்டு

viii. நீர் விளையாட்டு

விளையாட்டின் வாயிலாக கல்வியைக் கற்பிற்கலாம் என்பதால்தான் இன்றைய மாணவர்களுக்கு விளையாட்டு ஒரு பாடமாகவும், புறப்பாட நடவடிக்கையாகவும் பள்ளிகளில் கற்றுத் தரப்பட்டு வருகின்றன. ஒரு மாணவனுக்கு ஒரு விளையாட்டு *"Satu Murid Satu Sukan"* (Yahya Don & Siti Noor Ismail. (2016). என்ற கல்விக் கொள்கையின் வாயிலாக மாணவர்களின் அகம் மற்றும் புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனை அன்றே வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள் ஆவர்.

### சங்க இலக்கியத்தில் கல்வி பற்றிய மதிப்பீடு

சங்க இலக்கியத்தில் மேற்காணும் குறிப்புகளை அலசி ஆராய்ந்தால், பண்டைத்தமிழர்கள் கல்விக்கு அதுவும் குழந்தையின் வளர்ப்பின் போது எந்த அளவு முக்கியம் அளித்தார்கள் என்ற உண்மை விளங்கும். ஒரு குழந்தைக்குத் தேவையான அடிப்படை அறிவு, திறன் மற்றும் பண்புகள் வீட்டிலேயே மறைமுகமாகவும், நேரிடையாகவும் போதிக்கப்படுகின்றன. எது செய்யத்தக்கவை, வீட்டில் உள்ள பெரியோரும் இக்குழந்தைகளுக்கு முன் உதாரணமாய் இருக்க எது செய்யத் தகாதவை என்ற நன்னெறிப் பண்புகள் மிக கவனமாக இளம் வயதிலேயே விதைக்கப்படுகின்றன. (Salini, 1995, p.10).

அதேவேளை வாழ்க்கைக்குத் தேவையான திறன்கள் சிறு சிறு வீட்டு வேலைகள் செய்வதன் வாயிலாகவும், பெற்றோருக்கு வேலை செய்யும் இடத்தில் உதவி செய்வதன் வாயிலாகவும் கிடைக்கப் பெறுகின்றன. இதனால் வருங்காலத்தில் பெரியவர் ஆனதும் தனது சுய காலில் இவர்களால் நிற்க முடிகின்றது; தன்னம்பிக்கையையும் இது வளர்க்கிறது. அவ்வகையில் மறைமுகமாகப் போதிக்கப்படும் கல்வியானது வாழ்க்கைக் கல்வியாக அமைந்து விடுகின்றது.

ஆண் பிள்ளைகளுக்கு நிகராக பெண் பிள்ளைகளுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது (Gloria Sundaramathy, 1975:62). இதற்குத் தக்க சான்று 473 சங்க காலப் புலவர்களில் 43 பேர் பெண் புலவர்கள். இது உலகில் தோன்றிய ஏனைய நாகரீகங்களான சீனம், கிரேக்கம் போன்றவற்றைக் காட்டிலும் மிக அதிகம் என்ற கூற்றினைக் கீழ்க்காணும் அட்டவணை விவரிக்கின்றது.

அட்டவணை 2: பெண் புலவர்களின் எண்ணிக்கை

| காலம் | இடம் | மொழி | பெண் புலவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1500 கி.மு | வட இந்தியா | சமஸ் கிருதம் | 28 |
| 600 கி.மு | கிரேக்கம் | கிரேக்கம் | 1 |
| 600-500 கி.மு | வட இந்தியா | பாலி | 73 |
| 500-300 கி.மு | கிரேக்கம் | கிரேக்கம் | 6 |
| 200 கி.மு | வட இந்தியா | ப்ரக்திரம் | 11 |
| 100 கி.மு | இத்தாலி | லத்தீன் | 1 |
| 100 கி.மு | சீனா | சீனம் | 3 |
| 300- 200 கி.மு | தமிழகம் | தமிழ் | 41 |

மூலம்: விணீஸீவீ, 1981, ஜீ.275

அதேவேளை ஆன்மிக வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்துக் குழந்தைகளுக்குச் சிறு வயது முதற்கொண்டு சமய அறிவு போதிக்கப்பட்டுள்ளது. கோவில் வழிப்பாட்டில் இசைப்பயிற்சியும் அளித்து புத்தாக்கச் சிந்தனை தட்டியெழுப்பப் பட்டுள்ளது. அதேவேளை விளையாட்டுகளின் மூலமாக அறிவுக்கும், உடல் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது (Kathir Mahadevan, 1981, p.164).

**முடிவுரை**

இன்றைய வாழ்க்கைச் சூழல் மிகவும் சவால்மிக்கது. இச்சவால்மிக்க வாழ்க்கையைத் திறம்பட நகர்த்திச் செல்வதற்குக் கல்விதான் உறுதுணையாக இருந்து வருகிறது. காலத்தின் வளர்ச்சி, தேவைக்கேற்பவும் கல்வியும் இன்றும் பல்வேறு பரிணாமங்களைத் தாண்டி வளர்ச்சியடைந்தும் வருகிறது. காலங்கள் மாறினாலும் கல்வியின் தேவை, அவசியம், முக்கியத்துவம் என்பதில் எந்தவொரு மாற்றத்தையும் நம்மால் காண முடியவில்லை என்று தான் சொல்ல வேண்டும். கல்வியின் நோக்கமே சமசீரான மாந்தனை உருவாக்குவதுதான். இந்தக் கொள்கைதான் அன்றைய கல்வி முறையிலும் இன்றைய கல்வி முறையிலும் நம்மால் காண முடிகின்றது. வாழ்க்கை கல்வியாக இருந்த கல்வி, வாழ்நாள் கல்வியாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இந்த நியதியை அன்றே பழந்தமிழர் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகினர். அக வாழ்க்கைக்குத் தேவையான இறை மாண்பு, நன்னெறிகள், தத்துவங்களும் புற வாழ்க்கைக்குத் தேவையான அறிவியல், கணிதம், போர் முறைகள், கலைகள் என கல்வியறிவில் சிறந்து விளங்கினர். இதற்குச் சான்றாக அமைவது சங்க இலக்கியப் பாடல்களே.

## References


Aya Durai, L. (2003). *Pendidikan dalam peradapan india pada zaman klasik*. Kuala Lumpur: Universiti Malaya.

Bahagian Pembangunan Kurikulum. (2017). *Kurikulum standard sekolah rendah: Bahasa Tamil*

Kuala Lumpur: Kementerian Pelajaran Malaysia.

Bavani, M. (2014). Caṅkakāla tamiḻakattil eḻuttaṟivu. In R. Krishna Moorthy, R. Vengkadesan & M. Rajantheran (Eds.), *Payaṉpāṭṭiyal Pārvaiyil Tamiḻ Ilakkiyaṅkaḷum Āvaṇaṅkaḷum* (Vol. 2, pp. 869-873). Chennai: Semmuthai Pathipakam.

Gloria Sundaramathy, L. (1975). The women poets in cankam age. In *Journal Of Tamil Studies* (Vol. 8, pp. 62-79). Chennai: International Institute of Tamil Studies.

Devaneyappavanar, N. (2009). *Paṇṭait tamiḻ nākarikamum paṇpāṭum*. Chennai: Poombukar Pathippakam.

Mani, P.S. (1981). *Sangakala avaiyarum ulaga penpard pulavarkalum.* Chennai: Ulaga Tamil Araichi Niruvanam.

Gloria Sundaramathy, L. (1975). The women poets in cankam age. In *Journal Of Tamil Studies* (Vol. 8, pp. 62-79). Chennai: International Institute of Tamil Studies.

Kathir Mahadevan, C. (1981). *Cultural heritage of ancient tamils*. Madras: Lakshmi Publications.

Sangar, M. (2011). *Budaya masyarakat tamil zaman sangam berdasarkan teks paripatal*. Kuala Lumpur: Universiti Malaya.

Salini, I. (1995). *Caṅkat tamiḻariṉ maṉitanēya maṇineṟikaḷ.* Chennai: International Institute of Tamil Studies.

Shiza Mozhi, T. (2014). Kalvi vaḷarccikku vaḻikāṭṭiya ilakkiyaṅkaḷ. In R. Krishna Moorthy, R. Vengkadesan & M. Rajantheran (Eds.), *Payaṉpāṭṭiyal Pārvaiyil Tamiḻ Ilakkiyaṅkaḷum Āvaṇaṅkaḷum* (Vol. 1, pp. 437-442). Chennai: Semmuthai Pathipakam.

Subramania Pillay, G. (1986). The Main Aims and Ideals of the Tamil Educational System. In S. Subramanian & V. Madhavan (Eds.), *Heritage Of The Tamils: Education & Vocation* (pp. 329-337). Chennai: International Institute of Tamil Studies.

Subramanian, V. (1986). The growth and develoment of textile industry of the tamils. In S. Subramanian & V. Madhavan (Eds.), *Heritage Of The Tamils: Education & Vocation* (pp. 329-337). Chennai: International Institute of Tamil Studies.

Varatharasan, M. (2011). *Tamiḻ ilakkiya varalāṟu*. (23 ed.). Chennai: Sakhitya Akademi.

Venkat Araman,R. (1986). Educational of the Sangam. In S. Subramanian & V. Madhavan (Eds.), *Heritage Of The Tamils: Education & Vocation* (pp. 329-337). Chennai: International Institute of Tamil Studies.

Yahya Don & Siti Noor Ismail. (2016). *Kokurikulum dan Penjajaran Konstruktif di Sekolah*. UUM Press.

http://www.ulakaththamizh.org/JOTSissues.aspx.